Singapore Examinations and Assessment Board

**Singapore–Cambridge General Certificate of Education**
**Ordinary Level (2022)**

# Tamil B
# தமிழ் B
# (Syllabus 1152)

© MOE 2022

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| மதிப்பீட்டு நோக்கங்கள் | **3** |
| தேர்வு அமைப்புமுறை | **4** |
| தேர்வு விவர அட்டவணை | **6** |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | **7** |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | **8** |

## மதிப்பீட்டு நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஏற்கெனவே மாணவர் அடைந்துள்ள அடிப்படை மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

**கேட்டலும் நோக்கலும்**

- எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

**பேசுதலும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றமும்**

- தமது எண்ணங்களையும் கருத்துகளையும் மனவுணர்வுகளையும் சரளமாகவும் தெளிவாகவும் தமிழில் எடுத்துரைத்தல்
- ஒரு கருப்பொருளையொட்டி ஈடுபாட்டுடன் கருத்துப்பரிமாற்றம் செய்வதோடு தம் சொந்தக் கருத்துகளை சரளமாகவும் தெளிவாகவும் தமிழில் எடுத்துரைத்தல்

**படித்தல்**

- கொடுக்கப்படும் பனுவலைப் பொருளுணர்ந்து தெளிவாகவும் சரளமாகவும் வாய்விட்டுப் படித்தல்
- பலவகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

**எழுதுதலும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றமும்**

- கொடுக்கப்படும் மின்னஞ்சல், படக்கட்டுரை தலைப்புகளைப் புரிந்துகொண்டு தம் கருத்துகளைப் பொருத்தமாகவும் சரியான மொழியமைப்புடனும் எழுதுதல்

## தேர்வு அமைப்புமுறை

தமிழ் B தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1: கட்டுரை**
**(50 நிமிடங்கள்)**

இத்தாளில் இரண்டு கட்டுரைத் தலைப்புகள் இடம்பெறும். ஒன்று மின்னஞ்சல்; மற்றது படத்தொடரை அடிப்படையாகக்கொண்ட கட்டுரை. இரண்டு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் விடையளிக்கவேண்டும். தேர்வெழுதுவோர் 'முரசு அஞ்சல்' மென்பொருளைப் பயன்படுத்திக் கட்டுரையைக் கணினிவழித் தட்டச்சுச் செய்யவேண்டும்.

**வினாத்தாள் 2: மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்**
**(1 மணி நேரம்)**

இத்தாள் 'அ', 'ஆ', 'இ' ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது.

**'அ' பிரிவு (தெரிவுவிடை முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியிலிருந்து பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**'ஆ' பிரிவு (கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 1-3 கருத்துவிளக்கப்படங்கள் கொடுக்கப்படும். அவற்றிலிருந்து ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**'இ' பிரிவு (தெரிவுவிடைக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் கதை வடிவிலான பனுவல் ஒன்று இடம்பெறும். அதையொட்டி ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளில் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**வினாத்தாள் 3: வாய்மொழித் தேர்வும் கேட்டல் கருத்தறிதலும்**

இத்தாள் வாய்மொழித் தேர்வு, கேட்டல் கருத்தறிதல் ஆகிய இரு பகுதிகளை உள்ளடக்கியது.

**வாய்மொழித் தேர்வு**

இத்தேர்வு பின்வரும் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது.
- வாய்விட்டு வாசித்தல்
- ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்

**வாய்விட்டு வாசித்தல்**

கணினித்திரையில் இடம்பெறும் ஒரு வாசிப்புப் பகுதியை மாணவர் வாய்விட்டு வாசிக்கவேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசைநயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல்**

மாணவர் கொடுக்கப்படும் ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்கவேண்டும். பின்னர், தேர்வாளருடன் அதன் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடவேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலின் சரளம், பயன்படுத்தும் மொழியின் பொருத்தப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**கேட்டல் கருத்தறிதல்**

செய்தி, உரையாடல், கதை, விளம்பரம், அறிவிப்பு, சிற்றுரை முதலான தலைப்புகளில் நான்கு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரு தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெறவேண்டும் என்ற அவசியமில்லை.

# தேர்வு விவர அட்டவணை

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்<br>சாதாரண நிலைத் தேர்வு<br>தமிழ் B (1152)

| தாள் | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| **தாள் 1**<br>**கட்டுரை**<br>(50 நிமிடங்கள்)<br>[**100** சொற்களுக்குக் குறையாமல்] | மின்னஞ்சல்,<br>படக்கட்டுரை | கட்டுரை | 2<br>(ஒரு வினாவிற்கு மட்டும் விடையளித்தல்) | **(20%)**<br>20 |
| **தாள் 2**<br>**மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்**<br>(1 மணி) | | | | **(30%)** |
| | **‘அ’ பிரிவு**<br>முன்னுணர்வுக் கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 10 | 10 |
| | **‘ஆ’ பிரிவு**<br>கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 5 | 10 |
| | **‘இ’ பிரிவு**<br>கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 5 | 10 |
| **தாள் 3**<br>**வாய்மொழி**<br>(10 – 15 நிமிடங்கள்) | | | | **(50%)** |
| | **‘அ’ பிரிவு**<br>வாய்விட்டு வாசித்தல் | சுயவிடை | 1 | 10 |
| | **‘ஆ’ பிரிவு**<br>ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் | சுயவிடை | 1 | 20 |
| **கேட்டல் கருத்தறிதல்**<br>(ஏறத்தாழ 30 நிமிடங்கள்) | **‘இ’ பிரிவு**<br>கேட்டல் கருத்தறிதல் | தெரிவுவிடை வினாக்கள் | 10 | 20 |

# கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம்

| நிலை | வகை 1 | வகை 2 | வகை 3 |
|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **8 - 10** | **4 - 7** | **1 - 3** |
| **பொருள்**<br>(10 மதிப்பெண்கள்) | ▪ போதுமான அளவு கருத்துகளும் விளக்கமும்<br><br>▪ பொருத்தமான கருத்துகள் | ▪ போதுமான அளவு கருத்துகளும் ஓரளவு விளக்கமும்<br><br>▪ ஓரளவு பொருத்தமான கருத்துகள்; சாதாரணக் கருத்துகள்; கூறியது கூறல் இடம்பெற்றிருத்தல் | ▪ மிகக் குறைந்த அளவு கருத்துகள்<br><br>▪ பொருத்தமற்ற கருத்துகள்; தொடர்பற்ற, குழப்பமான கருத்துகள் |
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **8 - 10** | **4 - 7** | **1 - 3** |
| **மொழியும் அமைப்புமுறையும்**<br>(10 மதிப்பெண்கள்) | ▪ சில பெரும் பிழைகளும் சிறு பிழைகளும்<br><br>▪ பல்வகை சொல்வளமும் வாக்கிய அமைப்பும்<br><br>▪ கருத்துகளும் பத்தியமைப்பும் ஏற்புடைய வகையில் நிரல்பட அமைந்திருத்தல் | ▪ பல பெரும் பிழைகள்<br><br>▪ சொல்வளம் குன்றி இருப்பினும் கருத்துத் தெளிவு இருத்தல்; பெரும்பாலும் ஒரே மாதிரியான, சிறுசிறு வாக்கியங்களாக அமைந்திருத்தல்<br><br>▪ கருத்துகளும் பத்தியமைப்பும் ஓரளவு நிரல்பட அமைந்திருத்தல் | ▪ பலவகையான பெரும் பிழைகள்<br><br>▪ பொருள் விளங்கிக்கொள்ள முடியாத பிழைகள்; அடிப்படைச் சொற்களில் பிழைகள்; குழப்பமான மொழியமைப்பு<br><br>▪ கருத்துகளை நிரல்பட அமைத்தலிலும் பத்தி அமைப்பிலும் சிதைவு |

# வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம்

வாய்விட்டு வாசித்தல் **(10 மதிப்பெண்கள்)**

| **நிலை** | **வகை 1** | **வகை 2** | **வகை 3** |
|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **4 - 5** | **2 - 3** | **1** |
| **உச்சரிப்பும் சொல்லழுத்தமும்** (5 மதிப்பெண்கள்) | ▪ மிகச் சில பிழைகளை மட்டும் கொண்ட உச்சரிப்பு<br>▪ பொதுவாகத் தெளிவான சொல்லழுத்தம் | ▪ பல பிழைகளைக் கொண்ட உச்சரிப்பு<br>▪ ஓரளவு தெளிவான சொல்லழுத்தம் | ▪ பல பிழைகளைக் கொண்ட தவறான உச்சரிப்பு<br>▪ தெளிவில்லாத சொல்லழுத்தம் |
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **4 - 5** | **2 - 3** | **1** |
| **சரளமும் ஓசைநயமும்** (5 மதிப்பெண்கள்) | ▪ பொதுவாகச் சரளமான வாசிப்பு<br>▪ பொதுவாகப் பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ ஓரளவு சரளமான வாசிப்பு<br>▪ ஓரளவு பொருத்தமான குரல் ஏற்ற இறக்கம் | ▪ சரளமற்ற வாசிப்பு<br>▪ கிட்டத்தட்ட தனித்தனிச் சொல்லாக வாசித்தல் |

ஒளிக்காட்சியையொட்டிய உரையாடல் **(20 மதிப்பெண்கள்)**

| **நிலை** | **வகை 1** | **வகை 2** | **வகை 3** |
|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **8 - 10** | **4 - 7** | **1 - 3** |
| **கருத்துரைத்தலும் கருத்து வளர்ச்சியும்** (10 மதிப்பெண்கள்) | ▪ தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகளைக் கூறுதல்<br>▪ பெரும்பாலான கருத்துகளைத் தொடர்ச்சியாகவும் தெளிவாகவும் கூறுதல்<br>▪ பெரும்பாலும் உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்துதல்<br>▪ உரையாடலை நிகழ்த்துவதற்குக் குறைந்த அளவிலான தூண்டுதல் தேவைப்படுதல் | ▪ ஓரளவு தலைப்புக்கு ஏற்ற சில கருத்துகளைக் கூறுதல்<br>▪ சில கருத்துகளை ஓரளவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் கூறுதல்<br>▪ சில வேளைகளில் மட்டும் உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்துதல்<br>▪ உரையாடலை நிகழ்த்துவதற்கு அவ்வப்போது தூண்டுதல் தேவைப்படுதல் | • தலைப்புக்கு ஏற்ற கருத்துகள் சொல்ல இயலாமை<br>▪ கருத்துகளை விவரிக்க இயலாத நிலை<br>▪ பெரும்பாலும் உரையாடலைத் தொடர்ச்சியாக நிகழ்த்த இயலாமை<br>▪ உரையாடலை நிகழ்த்துவதற்குத் தொடர்ச்சியான தூண்டுதல் தேவைப்படுதல் |
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **8 - 10** | **4 - 7** | **1 - 3** |
| **சரளமும் மொழிப் பயன்பாடும்** (10 மதிப்பெண்கள்) | ▪ பொருத்தமான சொல்வளத்தையும் வாக்கியங்களையும் பயன்படுத்திச் சரளமாக உரையாடுதல் | ▪ அடிப்படையான சொல்வளத்தையும் எளிய வாக்கியங்களையும் பயன்படுத்தி ஓரளவு சரளமாக உரையாடுதல் | ▪ மிகக் குறைவான அல்லது பொருத்தமற்ற சொல்வளத்தைப் பயன்படுத்துவதோடு நிறுத்தி நிறுத்தித் தயக்கத்தோடு பேசுதல் |